DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.I, CHIDAMBARAM.
**Present:Selvi**.M. Mayadevi,B.A., L.L.B.,
**Judicial Magistrate No.I., Chidambaram.**

| | |
|---|---|
| Case No. | STC.No.33/2019 |
| Deposition of Witness for Prosecution | PW:1 |
| Cr.No. and Police Station : | |
| Name: | திரு. முருகன் |
| Father's /Husband Name: | த.பெ. பெரியசாமி |
| Village: | பு. ஆதனூர் |
| Age: | |
| **Solemnly Affirmed in accordance with the Provision Act The Oaths Act 1969(Act.44/1969) of the day of 10.03.2026** | |

Accused present.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>**

காசோலையை வங்கியில் எப்போது செலுத்தினேன் என்றால் 09.10.2018 ல் செலுத்தினேன். எப்போது காசோலை திருப்பப்பட்டது என்றால் மறுநாள் திருப்பப்பட்டது. காசோலை திருப்பப்பட்ட பின் எதிரியிடம் பணம் கேட்டேனா என்றால் மறுநாள் அவர் வீட்டிற்கு சென்று கேட்டேன். அதற்கு எதிரி என்ன சொன்னார் என்றால் பணத்தை அடுத்த நாள் திருப்பி தருவதாக சொன்னார். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் எதிரி யிடம் காசோலை திருப்பப்பட்ட பின்பு சென்று பணம் கேட்டது பற்றியும், அவர் மறுநாள் கொடுப்பதாக சொல்லியது பற்றியும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது வழக்கு புகாரிலும் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு 2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளவிவரம் தெரியுமா என்றால் தெரியும். எதற்காக 2 வது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. எந்த தேதியில் காசோலை யை வங்கியில் செலுத்தினேன் என்ற விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியிடம் நான் நெல் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் வேலை செய்தேன் என்றால் இல்லை. அவர் எழுதிக் கொடுக்க சொன்னால் எழுதி கொடுப்பேன். நான் எதிரியின் கணக்கு வழக்குகளை பார்க்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் வரவு செலவு இல்லை என்றாலும் எதிரி என்னிடம் காசோலை கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. இளவரசன் என்பவருக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்காக காசோலையை என்னிடம் கொடுத்து வங்கியில் போடச் சொன்னார் என்றாலும், மேற்படி காசோலையில்

பெறுபவர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் அந்த காசோலையில் நான் என் பெயர் எழுதி வங்கியில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு என்னிடம் சட்டபூர்வமான கடன் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open Court in the presence of the accused read over of the witness and Admitted by him/her to by correct.

(Sd/-**Selvi**.M. Mayadevi,)
J.M.No.I, Chidambaram